2026 ஜூன் மாதம் 12– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 124/2024

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW10 (LW19) – அசோக் |
| தகப்பனார் பெயர்: | ஆலடியான் |
| ஊர்: | தேனி –அல்லிநகரம் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | காவல் ஆய்வாளர், தேனி அல்லிநகரம் காவல்நிலையம் |
| வயது : | 39 |

12.06.2026

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி அல்லிநகரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.10.2023ம் தேதி போடிநகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது போடி அரசு மருத்துவமனையிலிருந்து 11.15 மணிக்கு பெறப்பட்ட தகவலின்பேரில் நான் போடி அரசு மருத்துவமனைக்கு சென்று, போடி, புதுக்காலனி, ஜெயம்நகர், சந்தனமாரியம்மன்கோவில் தெருவை சேர்ந்த போடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த கருப்பணன் மகன் முருகேசன் அவர்களை விசாரித்து புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தில் யோகமலர் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார்.

2. பின்னர் போடிநகர் காவல்நிலையம் வந்து, 15.00 மணிக்கு போடிநகர் காவல்நிலைய குற்ற எண்.493/2023 பிரிவுகள் 294 பி, 307 இ.த.ச.ன்படி வழக்கு

பதிவு செய்து, வாதி கொடுத்த புகார் வாக்குமூலத்தையும், நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையும் போடிநாயக்கனூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், பிற நகல்களை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்குக் கோப்பை மேல்நடவடிக்கைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். அந்த முதல் தகல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. எந்த அரசு மருத்துவமனையில் புகார்தாரரிடம் வாக்குமூலம் பெற்றேன் என்றால் தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து பெற்றேன். புகார் வாக்குமூலத்தை புகார்தாரரிடம் பெறாமல் வெற்றுத்தாளில் கையொப்பம் மட்டும் பெற்று காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்வாக்குமூலத்தை பெற்றுவிட்டு, சம்பவ இடம் சென்று பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை. நான் சொல்வதுபோல் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனது மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.06.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.12 18:45:01 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.06.2026